# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு 14 வள்ளுவர் ஆண்டு2030 சித்திரை 16வியாழக்கிழமை(29-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்131


### மடு புனித பகுதியிலிருந்து

## படையினரை வாபஸ்பெற ஆயர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 29

மடு புனிதப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் அங்கிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் என நாட்டின் சகல மாவட்ட கத்தோலிக்க ஆயர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

கண்டியில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற கத்தோலிக்க ஆயர்களின் வருடாந்த ஒன்று கூடலில்வைத்தே மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இந்த வேண்டுகோள் குறித்த கடிதம் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கா மற்றும்உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரியவந்துள்ளபோதிலும் — நேற்றிரவு வரை அந்தச் செய்தி பற்றிய மேலதிக விவரங்களைப்பெற முடியவில்லை. (இ-7)

## உயிலங்குளம்ஊடாகநேற்று பொதுமக்கள்செல்ல அனுமதி

### உணவுலொறிகளுக்கான தடை நீடிப்பு

வவுனியா, ஏப்ரல் 29

உயிலங்குளம் பாதையூடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியாவில் தங்கியிருந்த 700 பேர் நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து சுமார் 300 பேர் உயிலங்குளமூடாக வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

கடந்த 16 ஆம் திகதி மன்னார்-- வவுனியா வீதியில் 9 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து 18 ஆம் திகதி முதல் உயிலங்குளம் ஊடான மக்கள் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்ற உத்தரவாதம் தரப்பட்டாலேயே மீண்டும் பாதை திறக்கப்படும் என்று வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்திருந்தார்.

இதையடுத்து வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகள் வவுனியா பிரிகேடியர் டி. ஆர். டி. சில்வாவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினர். தமது கடமைகளுக்காக வவுனியாவுக்கு வந்து மீண்டும் தமது வீடுகளுக்கு செல்ல முடியாது நிற்கும் மக்களின் அவல நிலை குறித்தும் அம்புலன்ஸ் போக்குவரத்துத் தடையால் நோயாளர்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்தும் அதிகாரிகள் பிரிகேடியரிடம் விளக்கினர்.

எனினும் பாதை திறப்பதை கடுமையாக எதிர்த்த பிரிகேடியர் தொடர்ந்து அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

இதனை அடுத்து—

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மேதினத்தையொட்டி பாதுகாப்புத் தீவிரம்!

## கொழும்பில் பல வீதிகள் மூடப்பட்டன

கொழும்பு, ஏப்ரல் 29

மேதினத்தையொட்டி தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பொலீஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் படையினர் எந்த நிலைமையையும் எதிர்கொள்ளக் கூடியதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வெளி மாவட்டங்களில் இருந்து சுமார் 4 ஆயிரம் பொலீஸார் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

சுமார் 10 ஆயிரம் பொலீஸார் மே தினக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் —

சோதனைகள் அதிகரிக்கப்படும் என்றும் —

கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி.எம். டி. சில்வா தெரிவித்தார்.

இதே வேளை —

மே தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரின் சில வீதிகள் குறுகிய காலத்துக்கும் ஏனை

[10 ஆம் பக்கம் பார்க்க]

### மின்மாற்றி தகர்ப்பு

அம்பாறை மாவட்டம் மல்வத்தை சடயந்தலாவா என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு மின்மாற்றி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

( 10 ஆம் பக்கம் பார்க்க )

### சீருடையினர் தாக்குதல்:

## காத்தான்குடிப் பகுதியில் நேற்று கடை அடைப்பு

மட்டக்களப்பு காத்தான்குடியில் வர்த்தகர்கள் நேற்று தமது கடைகளை மூடி ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினமிரவு அவரது கடையில் வைத்து சீருடையினரால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த கடையடைப்பு நடத்தப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி மேற்படி வர்த்தகரது கடைக்கு முன்பாக வைத்து தமிழ் அமைப்பொன்றின் உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து படையினர் மேற்படி வர்த்தகரைத் தாக்கி எச்சரிக்கை செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-6-21)

### புதைகுழி தொடர்பாக மனு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் இடம்பெற்ற மனித புதைகுழி அகழ்வின்போது மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் மற்றும் தடயப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. பெறுபேறு இன்று யாழ். எடுத்துவரப்படலாம்

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் வெளியான ஜி. சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சை முடிவுகளின் படி யாழ். மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் இன்று பிற்பகல் பெரும்பாலும் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் பரீட்சார்த்திகளின் முடிவுகளைத் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே பரீட்சைப் பெறுபேறுகளை உரிய காலத்தில் யாழ்ப்பாணம் எடுத்து வர முடியவில்லை எனவும் —

இன்று பிற்பகல் பெரும்பாலும் பெறுபேறுகள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## 2பெண்கள் உட்பட 40பேர் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட 40 பேர் தற்பொழுது காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

மேற்படி முகாமுக்கு நேற்று விஜயம் செய்த மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் இந்தக் கைதிகளைப் பார்வையிட்டு இவர்களின் சேமநலன் பற்றி விசாரித்தார்.

கைதிகளின் உறவினர்கள் வழங்கிய கடிதங்கள் மற்றும் பொருள்களை அவர்களுக்கு வழங்கிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி கைதிகளினால் உறவினர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களையும் பெற்று வந்துள்ளார்.

நெடுந்தீவுக் கரையில் கடந்தவாரம் கரை ஒதுங்கிய நான்கு இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரி, மார்ச் 6 ஆம் திகதி மன்னார் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இந்தியப் படகோட்டிகளும் ஏழு இலங்கைத் தமிழர்களும் கடந்த 23 ஆம் திகதி அனுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவித்தார். [இ-5]

# சில தகவல்களின் அடிப்படையிலேயே படையினர் கிஷோரைகைதுசெய்தனர்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

வவுனியா ஏப்ரல் 29

படையினருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு — கிழக்கு மாகாண இணைப்பாளரும் வவுனியாக் கிளைச் செயலாளருமான சிவநாதன் கிஷோர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

சில நாள்களின் முன் கைது செய்யப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையின் வாகனச் சாரதி வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் சில விடயங்களை அவரிடம் இருந்து தெளிவுபடுத்துவதற்காகவே கிஷோர் கைது செய்யப்பட்டார் என்றும் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

விசாரணைகள் முடிவடைந்ததும் கிஷோர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படுவார். மேலதிக நடவடிக்கைகள் குறித்து பொலீஸாரே தீர்மானிப்பர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை—

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடு சுற்றிவளைப்பு 2 இளைஞர்கள் கைது!

வவுனியா, ஏப்ரல் 29

படையினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட மடுப்பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின்போது இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தட்சணாமருதமடுவைச் சேர்ந்த பாபு, சிறீஸ்கந்தராசா ஆகியோரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று படையினரால் அவர்களின் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சின்னபண்டிவிரிச்சான் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய படையினர் நான்கு இளைஞரைக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் அவர்களை விடுவித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு பாலகிருஷ்ணன்

(சட்டத்தரணி - முருகேசு அன் நீலகண்டன் கம்பனி, கொழும்பு)

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கந்தப்பு பாலகிருஷ்ணன் 26-04-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் பார்த்திபன், பாமினி, பகீரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு மயானததிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. பார்த்திபன்
(மகன்)

நாவலர் இல்லம்
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி/7351)

## நாராயணசுவாமி மகேந்திரன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

நாராயணசுவாமி மகேந்திரன் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆ. நாராயணசுவாமி (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) மனோன்மணி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், மனோகரிதேவி (இளைப்பாறிய ஆசிரியை - கொழும்பு), மனோரஞ்சிதபவர் (திருகோணமலை), சிறிதரன் (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்), மனோகரன் (சட்டத்தரணி — கொழும்பு), மனோமகமணி, மோகனதாஸ் (லண்டன்), இரத்தினவதனி (கல நிதி — இரசாயனவியல் அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், மனோகரன் (லண்டன்), பகீதரன் (திருகோணமலை) சுசீலா (நியூசிலாந்து), லலிதமனோகரி (கொழும்பு), காலஞ்சென்ற இராஜேஸ்வரி (லண்டன்), கெங்காதரன் (அமெரிக்கா) ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29-4-99) வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா மனோகரன்
(சகோதரன்)

அடைக்சலந் தோட்ட ஒழுங்கை,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

(65279)

## சங்கரப்பிள்ளை சண்முகம்

(சின்னவி)

காரைநகர் களபூமி, நந்தாவலைப் பிறப்பிடமாகவும் வவுனியா பூமாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சண்முகம் 28-04-1999 இல வவுனியாவில் காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சுந்தரம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, நாகம்மா ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தில்லையபலம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரியின் மைத்துனரும் கணேசலிங்கம், [ஜேர்மனி], சிவலிங்கம், பிரம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதாதேவி [ஜேர்மனி], சந்திராதேவி, வரதலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [29-04 99] வியாழக்கிழமை வவுனியாவில நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
பேரமக்கள்

நந்தாவில், களபூமி,
காரைநகர்.

[65285]

## கதிர்காமு அம்பலவாணர்

கைதடி கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு அம்பலவாணர் நேற்று [28-04-99] காலை காலமானார்.

அன்னார் பறுவதத்தின் அன்புக கணவரும் சிற்றம்பலம் [சுவீஸ்], திலகவதி [கொழும்பு] புனிதவதி, காலஞ்சென்ற லோகநாதன், சண்முகநாதன் [கொழும்பு] ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற கற்பகம், காலஞ்சென்ற கணேசன், வரதராசா [நகரசபை, சாவகச்சேரி] காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் மாமனாரும், பத்மலோஜினி, தாமலோஜினி வசந்தன், வசீகரன், நளினி, குகன், ரமணி, மோஜினி, பமா, தமிழ் பிரியா, சூட்டி, விஜிதன [பிரான்ஸ்], ரஜிதன் கலெக்ஸனா, மயூரன், விஜிதா, தர்பரூபன் கஜிதா ஆகியோரின் அன்புப்பாட்டனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று கைதடி ஊற்றலடி மயானத்தில நடைபெற்றன,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
ச. வரதராசா
[மருமகன்]

கைதடி கிழக்கு,
கைதடி.

[சி/7352]

## அதிபர்களுக்கு

தென்மராட்சி, ஏப்ரல 29

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர் தரம் III, தரம் II ஆகியவற்றில் உள்ள அதிபர்கள் தமது பதவி உயர்வுக்கான விண்ணப்பப் படிவங்களை நாளை காலை 10 மணிக்கு முன்னர் வலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3-171)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கூட்டுறவாளர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரை இன்று மாலை யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்வித் திணைக்கள விசேட செயற்திட்ட இணைப்பாளர் ரி. அருணகிரிநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். ''மாணவர்களின் உளநலப் பிரச்சினைகளும் அவற்றைக் கையாளும் முறைகளும்'' என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்துவார்.

(இ-6)


நாகம்ஸ்
சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு
ஜனகராஜ் நடித்த
அண்ணாமலை
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(65277)

ராஜா
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே நிம்மதி
இன்று காட்சிகள்
10-30, 2-00
3 ஆம் திகதி முதல்
உள்ளத்தை அள்ளித்தா

'B' திரையில்
யாழ்ப்பாணம்
விஜய் - ரம்பா
ரகுவரன், நிழல்கள்ரவி
நடித்த
என்றென்றும் காதல்
இன்று காட்சிகள்:
10-30, 2-30
(சி/7347)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
சசிகுமார், கௌசல்யா
நடித்த
எங்க வீட்டு மகாலக்சுமி
இன்று காட்சிகள்:
10-30, 2-30
Fax No. 070-212223
[illegible]
0094-70-212223
(64970)

தெஸ்பியன் கலைவட்டத்தினருடன்
இணைந்து
இணுவில் சிவகாமசுந்தரி
சனசமூக நிலைய
வளர்ச்சிக்காக
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
வழங்கும்
க. ரதீதரனின்
கானலில் ஒரு கப்படா காண்டம்
[நாடகம்]
காலம்: 30 - 04 - 99 வெள்ளி மாலை 3 00 மணி
இடம்: யா/இணுவில் மத்திய கல்லூரி
ஆரம்பப் பிரிவு மண்டபம்
நுழைவுச் சீட்டுக்கள் மண்டபவாயிலில்
- இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்
விளம்பர அன்பளிப்பு:
புதிய கஜீபன் நகை மாடம்
காங்கேசன்துறை வீதி, இணுவில். (65288)


## வடபிரதேச தொழிற் சங்கங்களின் ஐக்கிய மேதினக் கூட்டம்

இடம்: சிற்றி ஹோல் (City Hall)
ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
காலம்: 01 - 05 - 1999 சனி முற்பகல் 10-00 மணி

தலைமை: தோழர் மு. தியாகராசா
(வடமாகாண ஆசிரியர் சங்கம்)

பங்கு பற்றும் தொழிற் சங்கங்கள்:

1. வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்றூழியர்) சங்கம்
2. அரசாங்க லிகிதர் சேவை சங்கம்
3. பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
4. இலங்கை ஆசிரியர் சங்கம்
5. இலங்கை வங்கி ஊழியர் சங்கம்

அனைவரையும் தோழமையுடன் அழைக்கின்றோம்.

(65284) வடமாகாண ஆசிரியர் சங்கம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### ஏவத்திலிங்கம் செல்லத்துரை

[முன்னாள் நூலக உதவியாளர்
நகரசபை - சாவகச்சேரி]

தோற்றம்: 18—03—1929
மறைவு: 30—03—1999

எமது அன்புத் தெய்வத்தின் மறைவின் போது அஞ்சலி, அனுதாபங்கள், தெரிவித்தவர்கள் வேண்டிய உதவிகள் செய்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (29-04-99) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

சாவகச்சேரி.

(65282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம!



# யாழ். வண்ணை குளங்கரை மருதடி
# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
[ நாச்சிமார் கோயில் ]
# இரதோற்சவ சிறப்பிதழ்



29 - 04 - 1999

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகியாம் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் இன்று தேரேறி ஆரோகணித்து அடியார்களுக்கு அருட்காட்சி தருகின்றாள். வண்ணையம் பதியில் எழுந்தருளி வழிபடும் அடியார்களின் துயர்போக்கும் தாயாக விளங்குகின்ற ஸ்ரீ காமாட்சி விநாயகர், சுப்பிரமணியர் சமேதராக சித்திரத் தேரில் சிங்காரமாய்ப் பவனி வந்து கருணை மழை பொழிகின்றாள்.

ஸ்ரீ காமாட்சியின் அருள் பிரவாகம் எங்கும் பரிணமித்து சந்தோஷமான நல்வாழ்வு மலர வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

2 ஆவது குருமகாசந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



## தேரேறி வந்து போரோய வைப்பாய்!

செந்தமிழர் நிலத்தில் உறைந்தருள்பவள்
சித்திர(ரை)த் தேரேறி வருகின்றாள்
வந்த பகை துரத்தி வாழ்வளிப்பவள்
வண்ணையில் தேரேறி வருகின்றாள்
இந்த மானிலத்துக்கு ஏற்ற விடிவு தந்திட
எங்கள் காமாட்சி தேரேறி வருகின்றாள்
நொந்த இனத்தின் கோரிக்கை நிறைவேற்ற
நோன்பிருந்து சிவனை பூஜித்து தேரேறி
வருகின்றாள்.

தேரேறும் உந்தன் திருக்கோலம் கண்டு
தீந்தமிழால் உன்னை அர்ச்சித்து மகிழ்வோம்
போரோய்ந்து மண்ணில் கொலை, களவு. கைது
புதைகுழிகள் யாவும் இல்லாமல் வேண்டும்
சீரேந்தி "பிரமாதி" சிறப்போடு மலர்ந்து
செந்தமிழ் நிலமிங்கே சிறந்தாக வேண்டும்
பாரேந்தி உன்னை பாசூடி வாழ்த்த
பராசக்தி தாயே! தேரேறி வருக.

**மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்**


### தேர்விழா சிறப்புற வாழ்த்துவோர்

உறுதியான இரும்பு வேலைகளுக்கு
**S. கனகராஜா**
**இரும்புத் தொழிலகம்**
660, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

நல்ல ரகமான பலசரக்கு வகைகளுக்கு
**துளசிகா களஞ்சியம்**
1004. காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

அழகிய வர்ணப் படங்களுக்கு
**றெக்ஸ் படப்பிடிப்பாளர்**
606, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

வீடியோ CD படப்பிரதிகளுக்கு
**வீடியோ எக்கணமி**
612/4. காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

அழகிய நல்ல அச்சுவேலைகளுக்கு
**தயா அச்சகம்**
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன ரக துணிவகைகளுக்கு
**அபிராமி புடைவையகம்**
155, 156, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கு
**கிருஷ்ணபிள்ளை & சன்ஸ்**
591, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.


## கடைக்கண் பாராயோ தாயே காமாட்சி!

வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடர்களையும் களைந்து கருணை மழை பொழியும் காமாட்சிஅம்பிகை வண்ணை குளங்கரை மருதடியில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்புரிகின்றாள்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் யாழ். காங்கேசன்துறை வீதியில் வண்ணையம்பதியில் அமைந்துள்ளது. பொற்றொழில் கலைஞர்களது வழிபடு தெய்வமான அன்னை ஸ்ரீகாமாட்சி காஞ்சியில் அமர்ந்து இன்னருள் தருவது போல் இங்கும் வீற்றிருந்து தண்ணருள் பொழிகின்றாள்.

"சக்தி இல்லையேல் சிவமில்லை' என்பார்கள் சர்வமும் சக்திமயம்; அவளின்றி ஓரணுவும் அசையாது! 'அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே' என்பது போல் ஆதிபராசக்தியாக விளங்கும் அகிலாண்ட கோடி பிருமாண்ட நாயகியாம் ஸ்ரீகாமாட்சியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கும் பக்தர்கூட்டம் ஏராளம்.

காமம் என்றால் அன்பு; அக்ஷி என்றால் கண். ஆகவே அன்பையே கண்ணாகக் கொண்டு அருளை அள்ளி வீசி அன்பருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அம்பாளின் அருட்கடாட்சத்தின் மகிமை சொல்லுந்தரமன்று.

இவ்வாலயத்தோற்றம்பற்றி கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு. முற்காலத்தில் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்துக்கருகில் குளங்கரையைச் சூழ நாவல் மரங்களும் மருத மரங்களும் சூழ்ந்து அடர்ந்து இருந்தன. ஒருநாள் உச்சி வேளையில் விறகு ஒடிப்பதற்கு அயலில்

**சைவப் புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**

குடியிருந்த இளமங்கை ஒருத்தி அவ்விடத்துக்கு மாதவிடாய் காலத்தில் வந்துமருத மரத்தடியில் சிறுநீர் விட்டு அந்த இடத்தை அசௌசப்படுத்தியதால் அவ்விடத்திலிருந்த தேவதை சீற்றங்கொண்டு அவ்விளமங்கையின் கொங்கையைத் திருகி விட்டதாம்.

இவ்விவரத்தை அறிந்த ஒரு விஸ்வகுல வயோதிப மாது அத்தேவதையைச் சாந்தப்படுத்தும் நோக்கமாக அம்மரத்தடியில் ஒரு கல்லை வைத்து விளக்கேற்றி 'நாச்சி

[4 ஆம் பக்கம் பார்க்க]

வசந்த மண்டப பூசை காலை 8 மணி
தேரில்ஆரோகணித்தல் காலை 10 மணி
நண்பகல் அன்னதானம் நடைபெறும்.


### தேர்விழா சிறப்புற வாழ்த்துவோர்

அழகிய வர்ண வேலைகளுக்கு
**அப்பன் ஆட்ஸ்**
576, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

சுத்தமான அசல் தங்க நகைகளுக்கு
**சடாச்சரம் அன் சன்ஸ்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

உடனடித் தொலைத் தொடர்புக்கு
**நாகராஜா**
**தொலைத் தொடர்பு சேவை**
1147, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ருசியான மிக்சர் வேண்டுமா?
**வேல் மிக்சர்**
960, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

நல்ல ரகமான பொருள்களுக்கு
**லிங்கம் களஞ்சியம்**
603, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் நகைகளுக்கு
**திருநாவுக்கரசு பத்தர் & சன்**
**நகையகம்**
36, சேர். பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ருசிமிக்க குளிர்பான வகைகளுக்கு
**வைரமுத்து அன்சன்ஸ்**
810, கே. கே. எஸ். வீதி.
நாச்சிமார் கோயிலடி யாழ்.

பற்றறி சார்ஜ் செய்வதற்கும்
கேற் கிறில் வெல்டிங் வேலைகளுக்கும்
**ஸ்ரீ அம்பாள் எலக்றிக்கல்ஸ்**
1039, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்.

நல்லரக பலசரக்குப் பொருள்களுக்கு
நாடவேண்டிய இடம்
**விநாயகர் ரேடர்ஸ்**
1026, கே. கே. எஸ். வீதி, யாழ்.

அழகிய 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
**கணேசா நகையகம்**
194, கஸ்தூரியார் வீதி. யாழ்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு விரையுங்கள்
**சோபிகா நகைமாளிகை**
223, கஸ்தூரியார் வீதி, யாழ்.

உடனடித் தொலைத் தொடர்புகளுக்கு
**வேணுகா கொமினிகேசன்**
நாச்சிமார் கோயிலடி
T. P. 012 - 2541 012 - 2845

வெயிலில் நடந்து களைத்து விட்டீர்களா?! தாகந்தீர்த்துக் கொள்ள வேண்டுமா?!
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும் சிங்கப்பூர் தெரிவுக்கும்
**ரூபி நகை மாளிகை**
111 / 1,
கஸ்தூரியார் வீதி,
T. P FAX 021 - 2828
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வட்டு. கிழக்கு, வட்டுக் கோட்டையை சேர்ந்த ஜெய ராசசிங்கம் புஸ்பராணி என்பவருடைய விசேட அடையாள அட்டை 14 - 4 - 99 அன்று மானிப்பாய் மருதடிக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கரன் வெல்டிங் [வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு அருகில்] ஒப்படைக்கவும். (65223)

### வீடு விற்பனைக்கு

இல. 09, 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடும், வளவும் ($1\frac{1}{2}$ பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி. ராஜகுலேந்திரன், 09, 3 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (65184)

### பொருளியல்

வெளிவாரி விளைவுகள் சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று விகிதம் ஆகிய நூலகள் விற்பனையாகின்றன. (65208)

### திறப்பு

பருத்தித்துறை சாயி மந்திர் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீ சத்யசாயி சேவா அமைப்பின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ எஸ். சிவஞானம் இதனைத் திறந்து வைப்பார்.

முன்னர் பிரதேச செயலகம் இருந்த கட்டடத்தில் சாயி மந்திர் அமைந்துள்ளது. (ஐ–173)

A/L
2000, 2001

வகுப்புகள் அனைத்தும் முதலாம் திகதி மட்டும் நடைபெறமாட்டாது.

D. M. I.,
ஸ்ரான்லி வீதி,
யாழ்.
D. Sam.
(சி/7343)

வள்ளுவர்
அக்கடமி
உரும்பிராய்
O/L பகல் நேர
வகுப்புகள்
ஆரம்பம்:
03–05–99
திங்கள்
காலை 8.00 மணி
—அதிபர்
(65270)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி–யாழ்ப்பாணம்
A/L 2000
பொருளியல்
S. வரதராஜன்
① தேசியவருமானம்
9.00 A. M.
கணக்கீடு
B முகுந்தன்
① பங்குடைமை
10.00 A. M.
புதிய பிரிவு
ஆரம்பம்:
02–05 99
ஞாயிறு
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
[65273]

## நெடுந்தீவுக்கு மே மாதம் மின்சாரம் கிடைக்கும்

நெடுந்தீவு, ஏப்ரல் 29

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக ஸ்தம்பிதமடைந்துள்ள நெடுந்தீவுக்கான மின்சார விநியோகம் மீண்டும் அடுத்த மாதம் வழமை நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போதிய வருமானமின்றி மின்விநியோகத்தை வழங்க முடியாத நிலையில் நெடுந்தீவு பிரதேச சபை மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியிருந்தது.

டக்ளஸ் தேவானந்தா வட பகுதிக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு மக்களின் கஷ்டங்களை எடுத்துக்கூறி மின் நிலையம் இயங்குவதற்கு டீசல், ஒயில் போன்ற எரிபொருள்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து அதிகாரசபை தேவையான எரிபொருளை வழங்கச் சம்மதித்துள்ளது.

காரைநகர் கடற்படைத் தளத்தின் மூலம் எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மே மாதம் முதல் வாரத்துள் நெடுந்தீவுக்கான மின்சாரவிநியோகம் மீண்டும் ஆரம்பமாகும் எனத் தெரிய வருகிறது. (ஐ–111)

சுன்னாகத்தில்
15 ஆவது ஆண்டு நிறைவு விழாவை
மகிழ்வுடன் கொண்டாடும்
புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளான
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
மே 1 சனிக்கிழமை முதல் மே 8 சனிக்கிழமை வரை
நடத்தும் தமது
மலிவு விற்பனையில்
கலந்து — சிறந்து
பெரும் இலாபமும் திருப்தியும் அடையுமாறு
தமது வாடிக்கையாளர்களை
அன்புடனும் நன்றியுடனும் அழைக்கின்றார்கள்
15 ஆண்டுகளாக
நீங்கள் வழங்கி வரும்
ஆதரவுக்கு நன்றி கூறுகிறார்கள்
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
[புகழ் பெற்ற புத்தக வியாபாரிகளும்
பிரதம செய்தி முகவர்களும்]
பஸ் நிலையம் முன்பாக,
சுன்னாகம்.
(சி/7341)

நெஞ்சகலா நினைவலைகள்



அமரர்
சின்னராசா சிவாகரன்
மண்ணில் 04–11–1971
விண்ணில் 30–03–1999

நெஞ்சமது துடித்திட
நினைவுகளைத் தந்துவிட்டு
நீ எம்மைப் பிரிந்து
முப்பத்தொரு நாளானதையா!
நிஜமல்ல கனவு போல் இருக்குதையா
உன் பிரிவு......

ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்தித்து
பிரிவால் துயருறும்
பெரியம்மா
சாந்தலிங்கம் பத்மாவதி,
சகோதரிகள்
ரமா, ரேகா.
ஆனைக்கோட்டை.
மாலினி மருந்தகம்,
கோண்டாவில் சந்தி.
(65255)

## எழுதுநர் பதவிக்கு தெரிவானோருக்கு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கீழ் யாழ். மாவட்டத்தில் இருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு எழுதுநர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள 76 பேரும் குறிப்பிட்ட தினத்தில் திருமலைக்கு செல்ல முடியாத நிலையில் இருந்தால், யாழ். றக்கா வீதியில் உள்ள மாகாண சபை இணைப்பு அலுவலகத்திற்கு சமுகம்தந்து கையொப்பம் இடலாம் என்று மாகாண சபை இணைப்பாளர் ஏ. சி. செபநாயகம் தெரிவித்துள்ளார்.

நியமனம் பெறுவதற்குத் தகுதி பெற்றோரை எதிர் வரும் 3 ஆம் திகதி திருமலையில் சமுகமளிக்குமாறு முன்னர் கேட்கப்பட்டிருந்தது. (உ–3)

## விலை வீழ்ச்சி

சாவகச்சேரி சந்தைக்கு பலாப்பழம் பெருமளவில் வரத் தொடங்கியுள்ளது அதை அடுத்து பலாப்பழத்தின் விலை வீழ்ச்சியடைதுள்ளது. (ஐ–117)

## கடைக்கண்.....

(முதலாம் பக்கத் தொடர்)

யம்பாள்' எனப் பெயரிட்டு வழிபட்டு வந்தார். அதைந் தொடர்ந்து கிராம மக்கள் அதன் மகத்துவத்தை உணர்ந்து விக்கிரக வழிபாடாக மாற்றி சிறுகற்கட்டடமாக 1870இல் அமைத்து பின் படிப்படியாக வளர்ச்சி பெற்று விஸ்வகுல மக்கள் எல்லோரும் சேர்ந்து காமாட்சி அம்பாளே தமது குலதெய்வமென்றும் அவளது விக்கிரகத்தையே பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் எண்ணி அதனை ஆலயமாக அமைத்தார்கள்.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இடது கையில்பாசமும் மற்றதில் நீலோற்பலமும் வலது கையில் அங்குசமும் மற்றொன்றில் கரும்புமாக அருளொளி வீசும் திருவதனத் திருமுகத்துடன் காமாட்சி அம்மன் சிலையை வைத்து ஆலயம் அமைக்கப்பட்டது.

அன்று முதல் துரிதமாக வளர்ச்சி பெற்று இன்றுதெய்வீக மணங்கமழும் இராஜ கோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சி தரும் ஆலயமாக மிளிர்கின்றது. நாச்சிமார் கோயில் என வழங்கும் இவ்வாலயத்தில் வருடந்தோறும் சித்திரா பௌர்ணமியைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு அதற்கு முன்னதாக 15 நாள்கள் மகோற்சவம் நிகழும்.

விநாயகர், சுப்பிரமணியர் சமேதராக அம்பாள் கோலாகலமாக அலங்காரப் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோலத்தில் காட்சி தருவாள். காணக் கண் கோடி வேண்டும்.

சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வந்து அம்பிகை ஆரோகணிக்கும் அருட்காட்சி தனித்துவமானது ஸ்ரீகாமாட்சியின் திருவருளுக்குப பாத்திரராகி வாழ்வில் இஷ்ட சித்திகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை கூறமுடியாது. திருமணமாகாத கன்னியர்கள்தமக்கேற்ற வரன் கிடைக்க வேண்டுமென்றும் மணம் முடித்தோர் தமது கணவன்மார் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து தாம் என்றும் சுமங்கலிகளாகத் திகழ வேண்டும் என்றும் இங்கு திருவிளக்குப் பூசை செய்து வழிபடுவர்

நாமும் அம்பிகையின் கழலிணைகளைப் பணிந்து திவ்ய கருணையைப் பெற்று சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்து சுபீட்சமான சுக வாழ்வு வாழ்வோமாக! ★

சைவவித்தியாவிருத்திச் சங்கம்
ஆண்டுப் பொதுக் கூட்டம்

30 - 04 - 99 இல் நடைபெறவிருந்த மேற்படி கூட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி: 16 - 05 - 99
நேரம்: காலை 9 மணி.

செயலாளர்.
(சி/7346)

கண்ணீர் அஞ்சலி

எமது நல்லூர் வணிகர் கழகத்தின் செயலாளர்
திரு. க. கிருஸ்ணானந்த மூர்த்தி
அவர்களின் பாசமிகு தாயார்
கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி

அவர்கள் 28 – 04 - 99 புதன்கிழமை சிவபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் வணிகர் கழகம்
(65266)

கண்ணீர் அஞ்சலி

கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி

தாயை இழந்துதவித்திடும்தோழன் க. கிருஸ்ணானந்த மூர்த்தி - நல்லூர் வணிகர் கழகச் செயலாளருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

வே. திருநாவுக்கரசும் அவரது குடும்பத்தினரும்,
(நல்லூர் வணிகர்கழகத் தலைவர்,
செயலாளர் யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்)
மலர்மகள் வீதி,
அரியாலை.
(65267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப் பகுதியில் உள்ளூர் சேவைக்கு ஆறு சிறிய பஸ்கள் கிடைக்கும்

### ஈ. பி. டி. பி குழு பௌஸியுடன் பேச்சு

கொழும்பு, ஏப்ரல் 29
தீவகத்தில் உள்ளூர் சேவைகளை நடத்த ஆறு சிறிய பஸ்களை வழங்க போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தம்மைச் சந்தித்த குழுவிடம் அமைச்சர் இதைத் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். இராசமாணிக்கம், யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எஸ். மணிபல்லவராஜன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நெடுந்தீவு, நயினாதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய தீவுகளில் உள்ளூர் சேவையை நடத்த சிறிய பஸ்களை வழங்க வேண்டும் என்று குழு விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அவை அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

தீவுப் பகுதியில் தற்சமயம் பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள குமுதினிப்படகு அடிக்கடி பழுதடைவதால் புதிய படகு ஒன்றைத் தரவேண்டும் என்று குழுவினர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் உடனடியாக புதிய படகு ஒன்றைத் தருவதாக உறுதி அளித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள முக்கிய வீதிகளான யாழ். நகரில் இருந்து செல்லும் காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, சாவகச்சேரி வீதி, ஊர்காவற்றுறை வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றை 'காப்பற்' வீதிகளாக மாற்ற வேண்டும் என்று குழுவினர் கோரினர்.

'காப்பற்' வீதிகளை அமைக்கத் தேவையான உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வது முடியாத காரியம். அந்த வீதிகளை தரம் கூடிய வீதிகளாக அமைக்க ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தஅமைச்சர் அந்த வீதிகள் தொடர்பான விவரங்களை வீதி அதிகார சபையிடம் கோரியுள்ளார்.

பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர் நன்மை கருதி சாவகச்சேரியில் இருந்து காங்கேசன்துறை வரை ரயில் சேவை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி இந்தச் சேவையை நடத்த ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதி கூறினார்.

யாழ். நகரில் உள்ள மத்திய பஸ் நிலையத்தை நவீன வசதிகளுடன் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தூதுக்குழுவினர் கோரினர்.

வட மாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதி அளித்தார். (ஐ-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் ''உத்தேச கல்விச் சீர்திருத்தமும் அதன் தாக்கங்களும்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (க-ரி)

### யாழ். மாநகரசபை பகுதியில்


# மலத்தியோன் விசிறும் பணிகள் பாதிப்பு

அரியாலை, ஏப்ரல் 29
யாழ். மாநகரப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியில் மலத்தியோன் கையிருப்பு முடிவடைந்திருப்பதாலேயே மலத்தியோன் விசிறும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். நகர கரையோரப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணி பாதிக்கப்பட்டிருப்பதால் நுளம்பின் பெருக்கமும் அங்கு அதிகரித்துள்ளது. (ஐ-17)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 — 01 — 1962 | 29 — 04 — 1994 |

அமரர்
**சரவணன் ஞானசேகரம்**
[ வெளிக்கள உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை ]

ஐயா ! நீவிர் தேவலோகத்தில் — சரணடைந்த
இந்த ஐந்தாண்டு தினத்தில் உமது ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள்.**

பாடசாலை வீதி,
நாவற்குழி தெற்கு,
கைதடி.

63/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
[C/7339]

# இனந்தெரியாதோரால் அ. அட்டைகள் பறிப்பு!

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 29
வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரு கல்லூரி மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் இனந்தெரியாத நபர்களால் பறிக்கப்பட்டதாக சுன்னாகம் பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது,

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி பயிலச் சென்ற இரண்டு உயர்தர வகுப்பு மாணவர்களின் அடையான அட்டைகளே பறிக்கப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று அடையாள அட்டைகள் பறிக்கும் சம்பவங்கள் உடுவில் மல்வம் பகுதியிலும் இடம்பெற்றிருப்பதாக சுன்னாகம் பொலீசில் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் மல்வம் பகுதியில் கடந்த ஒரு வாரகாலத்தில் ஏழு வீடுகளில் இனந்தெரியாதோரால் பல அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

யாழ். குடாநாட்டில் அடையாள அட்டைகளைத் தொலைப்போரதும், தவறவிடுவோரினதும் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், தினமும் பல முறைப்பாடுகள் இது குறித்து பொலீசில் பதிவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 152)

# கடற்றொழில்சமாசத்துக்கு உபகரணங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் 35 லட்சம் ரூபா பறுமதியான கடற்றொழில் உபகரணங்களைக் கொழும்பிலிருந்து தருவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தங்கூசிவலைகள் மற்றும் உபகரணங்களே இவ்வாறு தருவிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு கிளைச் சங்கங்கள் மூலம் இன்று விநியோகிக்கப்படும் என கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் சி. தவரெட்ணம் தெரிவித்தார். (ஐ-7)

### தப்பியோடிப் பிடிபட்ட

# இரு கடற்படையினரின் நிலையை அறியப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
காரைநகரில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 கடற்படைச் சிப்பாய்களின் நிலை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமைச் செயலகம் யாழ் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியைக் கேட்டுள்ளது.

கடற்படையில் இருந்து கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் தப்பியோடிப் பின்னர் கடந்த வருடம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட கருணாரட்ண, சந்திரகுமார ஆகியோர் பற்றியே அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கடற்படைச் சிப்பாய்களின் பெற்றோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே தாம் நேற்று முன்தினம் காரைநகர் கடற்படை முகாமுக்குச் சென்று குறித்த சிப்பாய்களின் நிலைபற்றி ஆராய்ந்ததுடன், கடற்படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி செல்வி கௌரிசுந்தரலிங்கம் தெரிவித்தார். (ஐ-7-173)

# நீங்கா நினைவில் நிற்பவர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி | 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**சின்னராசா சிவாகரன்**
(V S B களஞ்சியப் பொறுப்பாளர்
உரிமையாளர் அம்பாள் ஸ்ரோர்ஸ்)

மண்ணில் **1971—11—04** விண்ணில் **1999—03—29**

**சின்னராசா கிருபாகரன்**

மண்ணில் **1975—07—24** விண்ணில் **1992—04—27**

எங்கள் உயிர்க் காதரவு
உங்கள் துணை என்றிருந்தோம்
வந்த கடன் முடிந்ததென
விதிவழியே சென்றுவிட்டீர்!
எங்கள் அருங்குல விளக்கே
எமதன்பின் ஜீவிதமே
எந்தப் பிறப்பெடுத்தாலும்
உங்கள் நினைவகன்றிடுமோ!

என்றும் உங்கள் நினைவில்
**அப்பா, அம்மா, அக்கா,**
**அத்தான், சகோதரிகள்.**

பிடாரி கோயிலடி,
கொக்குவில்.

(65225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரா பௌர்ணமி விழா

ஏழாலை தெற்கு களபாவோடை அருள்மிகு
ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் ஆலயத்தில்
30-04-99 வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி
விழா நடைபெறும்.

காலை 8-00 மணிக்கு அபிஷேகம்
காலை 10-00 மணிக்கு விசேட பூசை
காலை 11-00 மணிக்கு அம்மன் வீதி உலா
வந்து நண்பகல் 12-00 மணியளவில்
அன்னதானம் நடைபெறும்.

அம்பாள் அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து தங்கள் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(65143) தேவஸ்தானம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
18 — 12 — 1989

இறைவன் அடியில்
21 — 04 — 1997

செல்வி
**நிஷாந்தினி கந்தசாமி**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)
திதி: 29 - 04 - 1999

எங்கள் அன்புச் செல்வமே!
ஆறாத்துயரில் ஆழ்த்தி ஆண்டிரண்டு சென்றதம்மா!
ஆண்டு பல சென்றிடினும் இனியவளே!
எம் உணர்வுகளில், நினைவுகளில், மனங்களில்
என்றென்றும் வாழ்ந்து கொண்டேயிருப்பாயம்மா

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

—குடும்பத்தினர்

167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (65234)

## கல்முனையில் கிரனேட் வீச்சு

அம்பாறை ஏப்ரல் 29
கல்முனையில் கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயம் அடைந்தார்.

கல்முனை பிரதான வீதியில் உள்ள தாஜமஹால் காவல் அரண் பகுதியில இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் நுஹ்மான் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-14)

## இலவச தையல் பயிற்சி வகுப்பு

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் 1999 ஆம் ஆண்டுக்குரிய தையல் பயிற்சி நெறி வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தெரிவு செய்யப்பட்டவர்கள் உடனடியாக வகுப்புக்கு சமுகம் அளிக்குமாறும் —

புதிதாகச் சேரவிரும்புபவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது [இ]

## விற்பனைக்கு

புறொயிலர் ஸ்ராட்டர், புறொயிலர் பினிசர் கோழித்தீவனம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்திலும், சங்கத்தின் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/7313)

## சாந்தி அச்சகம்

நாச்சிமார் கோயிலடி
575, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

### தொலைத் தொடர்பு சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல:
உள்நாடு 021 — 2821
வெளிநாடு 0094 — 21 — 2821

இரவு பகல் சேவை

தங்குமிட வசதியும் உண்டு.

(65251)

## ஞானாசாரியார் கல்லூரிக்கான விளையாட்டு மைதானம்

நில உரிமையாளர்களால் சம்மதம் தெரிவித்து தரப்பட்ட கடிதத்தின் பிரகாரமும் 24—09—98 இல் உதயன் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தின் பிரகாரமும் பாடசாலை பழையமாணவர்களும், பெற்றோர்களும் சேர்ந்து விளையாட்டு மைதானத்தைச் சுற்றிவர குறடு அமைக்கவுள்ளோம் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம். இது தொடர்பான அபிப்பிராயங்கள், ஆலோசனைகளைத்தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
ஞானாசாரியார் கல்லூரி,
கரவெட்டி.

(சி/7340)

## நியூட்டன் பட்டப்படிப்பு கல்லூரி

314, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி)

G. A. Q 1st .in Com.,
B. A - P-I, B. Com.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. ஞானேஸ்வரன் |
| கணக்கியல் | — | திரு. S D. J. சுதர்ஷன் |
| தமிழ் | — | திரு. அருந்தாகரன் |
| இந்துநாகரிகம் | — | திரு. M. R. |
| மெய்யியல் | — | திரு. V. யுகபாலசிங்கம் |
| அரசியல் | — | திரு இளங்கோ |
| கிறிஸ்தவம் | — | செல்வி. சுனித்தா |

★ Maths, Eng. உட்பட சகல பாடங்களும் நடைபெறும்.
★ தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்.


ஆரம்பம்: 08 - 05 - 99
சனி 12 மணி

SPOKEN ENGLISH
By: BRITTO


புதிய பிரிவு ஆரம்பம்: 9 மணி. (65244)

## நினைவஞ்சலி

### முதலாம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு



அமரர்
**செ. ச. பரமலிங்கம்**
[சிறைச்சாலை அத்தியட்சகர்]
மண்ணில் உதித்தது
31 - 12 - 1939
விண்ணில் மறைந்தது
29 - 04 - 1998



செல்வன்
**ப. மணிவண்ணன்**
[யாழ். பரி,யோவான் கல்லூரி]
மண்ணில் உதித்தது
05 - 05 - 1976
விண்ணில் மறைந்தது
27 - 07 - 1993

ஈரெட்டு வயதினிலே செல்வ மகன் பறந்து செல்ல
இதயத்து வேதனைதான் உள்ளூர உமை அரித்தே...
ஐந்தே ஆண்டுகளில் அவன் பாதை நீர் தொடர்ந்து
கடுகியே நீர் செல்ல கலங்கித் தவிக்கின்றோம்...
பண்பிலே நீர் சிறந்து பாரினிலே ஏற்றம் பெற்று
கற்றோரும் மற்றோரும் கூடிய சபை தனிலே
ஏற்றம் மிகப் பெற்றீரே — அப்பா!
எத்துணை அவசரம் உமக்கு எமை விட்டுப் பிரிவதற்கு
உங்களை இழந்து ஆண்டுகள் பல சென்றாலும்
எங்கள நினைவுகளில நீங்களிருவீரும் நித்தியமாய் நிலைத்திருப்பீர்!

மனைவி, மகள்மார், மருமகன், உறவினர்.

இல, 36/16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [65232]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
—
07
—
1936



மறைவு
29
—
04
—
1996

திருமதி
**இராமசாமி ஞானம்மா**

அன்புத் தாயே!
பிள்ளைகள் கதறிட, உடன்
பிறந்தோர், உற்றார், உறவினர் கலங்கிட
பொல்லா நோய்வந்து சொல்லாமல்
கொண்டு சென்றதோ?

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மக்கள், மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்வைகள்.

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ், 66, சிவன் பண்ணை வீதி
39/2[119], மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம். [65247]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கெட்ட சமிக்ஞை

வடக்கு—கிழக்கில் நடைபெறும் போர் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

இவ்வருடம் பெப்ரவரி மாத முற்பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்கு விஜயம்செய்த சர்வமதப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி இதனைக் கூறினார்.

வன்னிக்குச் சென்றிருந்த 28 மதப் பிரமுகர்களில் 18 பேர் கடந்த திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்தனர். அவ்வேளை விடுதலைப் புலிகளுடன் தாம் பேசிய விடயங்கள் குறித்து ஜனாதிபதிக்கு விவரித்தனர்.

அரசாங்கமே போவரை நடத்துவதால் அதனை நிறுத்தி சமாதானத்துக்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கருத்து—நிலைப்பாடு குறித்து ஜனாதிபதியிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போதே அவர் போரை நிறுத்த முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்திருக்கிறார்.

போர் நடைபெறும் பிரதேசங்களிலும் அரசாங்கம் 'விடுக்கப்பட்ட பிரதேசம்' என்று வர்ணிக்கும் தமிழ்ப் பகுதிகளிலும் வாழும் மக்களின் அவலங்களையும் வாழ்க்கைக் கஷ்டங்களையும் ஜனாதிபதி இன்னும் புரிந்து கொள்ளவில்லை—

அல்லது —

அவற்றைப் புரிந்து கொண்டும் தம்மிடம் அதிகாரம் குவிந்திருப்பதால் தாம் எதனையும் செய்யலாம் என்ற மமதையுடன் இப்படிப் பேசுகிறார் — என்றே அர்த்தப்படும்.

தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் இந்தப் போரில் மடிகிறார்கள் என்பதனையும் போரினால் உண்டாகும் அழிவுகளையும் கவனத்தில் எடுத்திருப்பின் சந்திரிகா இவ்வாறு தெரிவித்திருக்கார்

தமது அரசியல் எதிர்காலத்தை முன்னிறுத்தியே நடைபெறவிருக்கும் தேர்தல்களை மனதில்வைத்தே அவர் இவ்வாறு சொல்கிறார் எனக் கருதலாம்.

போரினால், போரைத் தொடர்வதனால் தமிழர்களுக்கு ஒரு சிறு புள்ளியளவு நலனும் கிடைக்கவில்லை என்பது ஜனாதிபதிக்குத் தெரியாமல் இல்லை இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் இருந்தேனும் அவர் தமிழர்களின் அதிருப்தியைப் புரிந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை என்பதனையே போர் பற்றிய அறிவிப்புப் புலப்படுத்துகிறது

மேலும் விடுதலைப் புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதற்கு இணங்கினால் மட்டுமே அவர்களுடன் பேச முடியும் என்று கூறி பேச்சுவார்த்தைக்கான கதவுகளையும் இறுக்க மூடிவிட்டார்.

தனிநாட்டுக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஒன்றை அரசு அறிவிக்காமல் இவ்வாறு நிபந்தனை விதிப்பது விடுதலைப் புலிகளுடன் எந்த வகை இணக்கத்துக்கும் வருவதற்கு தயாரில்லை என்பதற்கான சமிக்ஞையே.

மொத்தத்தில் தமிழ் மக்களின் துயரங்கள் தொல்லைகள் இப்போதைக்கு நீக்கப்படமாட்டா என்று கல்மேல் எழுத முனைகிறார் ஜனாதிபதி.

வலி.வடக்கில்

# 10 ஹெக்டேயரில் பயிர்கள் அழிவு

சுன்னாகம், ஏப்ரல் 29

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இயற்கை அனர்த்தம் காரணமாக 10 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்கள் அழிந்துபோய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாகவும், கடந்த ஆண்டு இறுதியிலும் இவ்வாண்டு முற்பகுதியிலும் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தாலுமே இப்பயிரழிவு ஏற்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-27)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் எழுதிய "திருமுறைச் செல்வம்" நூலின் அறிமுகவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் ஆசிரியர் க. தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுகவுரையை பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதனும், பாராட்டுரைகளை ஆசிரியர் த நாகேஸ்வரன் பிரதேச சபைச் செயலர் ந. பாலச்சந்திரன் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் செ. மகேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

பதிலுரையை நூலாசிரியர் சிவ. மகாலிங்கம் நிகழ்த்துவார்.

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 29

வலிகாமம் கல்வி வலயப் பிரிவு இரண்டின் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. த்ற்பரானந்தன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

பிரிவு மூன்றின்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் அதே தினம் பிற்பகல் 1.30 மணிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ வி. கணேசலிங்கம் தலைலமயில் யூனியன் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

(ஐ-152)

## கலை இலக்கிய ஒன்று கூடல் நிகழ்வு

வலிகாமம் தெற்கு, ஏப்ரல்29

தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தின் 44 ஆவது ஒன்று கூடல் நிகழ்வு, திருமதி தையல்பிள்ளை அப்பாக்குட்டி நினைவு இலக்கிய நிகழ்வு, கவிஞர் சோ. பவின் 'வடக்கிருத்தல்' கவிதைத் தொகுதி அனுபவங்கள் ஆகியன தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளன.

வலிகாமம் கல்விவலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறும்.

தொடக்கவுரையை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசுவும், வாழ்த்துரையை நல்லூர் ப.நோ.கூ. ச. தலைவர் பெ. கனகசபாபதியும் நிகழ்த்துவர்.

கவிஞர் சோ. பத்மநாதனின் 'வடக்கிருத்தல்' நூல் அனுபவ உரையை வவுனியா வளாக விரிவுரையாளர் க. ஸ்ரீ கணேசன் நிகழ்த்த, ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் வழங்குவார்.

கவிஞர் சோ. பத்மநாதன் ஏற்புரையும், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் நன்றியுரையும் இடம்பெறும்.

(ஐ-152)



## சாயி சிந்தனை

மனிதன் வாழ்க்கையில் இன்பம் கிடைக்க உணவு, உடை, வீடு என்று பல வசதிகளையும் நாடிப்போகிறான். ஆனால் மனமும் அமைதியாக இருந்தால் தான் அவற்றை அனுபவிக்க முடிகிறது. மனம் தான் உடம்பின் நிலையைக் கட்டுப்படுத்துகிறது டாக்டர்களும் கூட உடல் ஆரோக்கியத்துக்கு உள்ளமும் வலிமையுடன் விளங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மனம் என்பது மனிதனை நல்ல வழியிலும் சேர்க்கும்; கெட்ட வழியிலும் இழுத்துக் கொண்டு போய்விடும். ஆகவே அது நமக்கு நன்மை தர, அது முதலில் அமைதியாக இருக்க வேண்டும்.

நாம் எப்போது மிகுந்த அமைதியுடன் இருக்கிறோம்? ஆழ்ந்த தூக்கத்தை அனுபவிக்கும் போது தானே? "ஒரு தொந்தரவும் இல்லாமல் நிம்மதியாகத் தூங்கினேன்!" என்று சொல்லும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது? அதாவது புலன்கள் அடங்கிக் கட்டுப்பட்டு ஓய்ந்து நிற்கும் நிலையே, நமக்கு மிகுந்த ஆனந்தத்தை அளிக்கும் நிலையாக இருக்கிறது. ஆகவே விழித்திருக்கும் போதும், புலன்களைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டால் எப்போதும் அந்த ஆனந்த மயமான நிலையை அடையலாம்.

இதைத் தான் நிவ்ருத்தி மார்க்கம் என்று சொல்கிறார்கள். மனம் வெளி ஆசைகளிலிருந்து சுருங்கி, உள்முகமாக ஈடுபட வேண்டும். உள்ளே உள்ள உணர்வுகள் ஆசை, காமம், வெகுளி, மயக்கம் போன்றவை இல்லாமல் சுத்தமாக ஆக வேண்டும். காரியங்களின் மீது பற்று வைத்து பிரவிர்த்தி மார்க்கத்தில் ஈடுபட்டால், அதற்குரிய தூசு நம்மீது படிந்து நம்மை அழுக்காக்கி விடும். பற்றில்லாமல், காரியங்களைச் சேவை மனப்பான்மையுடன் செய்து அதன் பலாபலன்களை இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டால் நமக்கு நிலையான மன அமைதி கிடைத்து விடும்.

[நன்றி: ஞானபூமி]

## சமய சந்நிதிகளில்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். நாளை வெள்ளிக்கிழமை சித்திரைப் பூரணையன்று காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(க-103-30)

★ ★ ★

நெடுந்தீவு, ஏப்ரல் 29

காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலயத் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-111-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

(க-30)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான பஞ்ச குண்ட யாக கௌமார மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

12 ஆம் திகதி சப்பறமும், 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-27-30)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு அரசடி ஸ்ரீ வாலையம்மை ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பதினாறு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

வடமராட்சி, ஏப்ரல் 29

வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் ரதோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும்

(க-30-173)

★ ★ ★

வடமராட்சி, ஏப்ரல் 29

மேலைப் புலோலிஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் பாலஸ்தாபன வைபவம் இன்று வியாழன் இரவு 9 மணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து விசேட பூசை அபிஷேகம் என்பனவும் இடம்பெறும்.

(க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறவுள்ளது.

(க-30)

### நாளை

சித்திரை 17

வெள்ளிக்கிழமை

திதி: பூரணை

முன்இரவு 8 30 வரை.

நட்சத்திரம்: சுவாதி

பின்னிரவு 4 23வரை.

சித்திராபூரணை விரதம்

சித்திர குப்த விரதம்

சுபநேரம்: 5.58-7 28

ராகுகாலம்: 10.28-11.58

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

உரும்பிராய், ஏப்ரல் 29

உரும்பிராய் கிழக்கு, திருக்கரந்தனூர் சிவபூத நாகேஸ்வரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.30மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

தொடர்ந்து பதினைந்து நாள்கள் உற்சவம் இடம்பெறும்.

(க-154)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 29

மூளாய் வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமைகாலை 9 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது.

(க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 29

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் அரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

மே மாதம் 9 ஆம் திகதி தேர் உற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-30-173)

★ ★ ★

பருத்தித்துறை, ஏப்ரல் 29

சித்திரா பௌர்ணமிதினம் நாளை வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி வடமராட்சிப் பகுதி ஆலயங்களில் சித்திர குப்த நாயனாரின் புராணம் படிப்பதுடன் சித்திரைக் கஞ்சியும் வழங்கப்படவுள்ளது.

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசையும் ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

(118)

## வலய மட்ட மெய்வன்மை

தென்மராட்சி, ஏப்ரல் 29

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகள் மே முதலாம் இரண்டாம் திகதிகளில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் பளைக் கோட்ட மாணவர்களுக்காக பளையிலிருந்து மட்டுவில் தரை விசேட பஸ்சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இறுதிப் போட்டிகள் மே ஏழாம் திகதி நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் மூ. வ. செல்வராசா தெரிவித்தார்.

(ஐ-117)

## அ. அட்டை விண்ணப்பப் படிவங்கள்

நவாலி, ஏப்ரல் 29

கொழும்பிலிருந்து யாழ். ஆள்பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்த ஏழாயிரம் தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் நீண்டகாலமாக இப்படிவத்துக்கு நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-100)

### உதய வாக்கு

"அவர்கள் சொல்கிறார்கள்" என்பதுபொய்யின் கூடப்பிறந்த தம்பி!

- ஜேர்மன் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கத்தானை சாவகச்சேரி
# இத்தியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான
# இரதோற்சவ விழா சிறப்புமலர்

[ 29-04-1999 ]



## மும்மலங்களையும் வேரறுக்க தேரில் எழுந்தருளும் விநாயகர்

'புரமடுநாட் சான்ற நிலத் தேர் பொரு மணித்தேர் ரங்கத் தலைவர் உருட்டினார்'

திரிபுர சம்மாரத்து உண்மைக் காட்சியை வெளிப்படுத்திக் காட்டுவது ஆணவாதி மும் மலங்களையும் நீக்க, வேரறுக்க இரதோற்சவ விழா நடத்தப்படுகின்றது. இதுவே இரதோற்சவத்தின்உண்மைப் பொருள். பரமபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர் உருள்களாகவும் 4 வேதங்கள் குதிரைகளாகவும் சரம், அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும் அமைக்கப்பட்ட தேரில் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கு கொண்டு செலுத்த முப்புரத்து அசுரர்களையும் சிரித்தெரித்தருளினார்.

''புரிசை மூன்றையும் பொன்றக்குன்ற விலேந்தி வேத புரவித்தேர் விசைந்து திரிசெய் நான்மறையோர் சிறந்தேத்தும் திருமழலைப் பரிசினால் அடிபோற்றும் பக்தர்கள் பாடியாடப் பரிந்து நல்கினர் அரிய வீழ் கொண்டீர் அடி யேற்கு மருளுதிரே'

இன்றைய தினம் எம்பெருமான் தேரினில் அரும் காட்சியைக் காண நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே என்று எண்ணத் தோன்றுகின்றது. அடியார்களின் துயர்துடைத்து திருவருள் பொழிய தேரில் புறப்பட்டு வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். எம்பெருமானின் திருவருள் சக்தியை கண்ணுற்று அவனருளால் அவன் தாள் வணங்கி துயர்களைந்து நல் வாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வழுத்தி நிற்கின்றேன்.

'மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'

★

தலைவர்,
பரிபாலன சபை,
இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## தனிப் பெரும் தலைவன்

ஆசியுரை!

'வேதசிரஸ்' என்றும் பிரணவம் என்றும், சுத்த மாயை என்றும் பல்வேறு வேதங்களாலும், தேவர்களாலும் புகழ்ந்து போற்றப்படும் தனக்கொரு நாயகன் இல்லாதுதனிப் பெருந் தலைவனாக விளங்குவதனால் விநாயகப் பெருமான் முதன்மையானவராக விளங்குகின்றார்.

சைவமும் தமிழும் தளைத்து ஓங்கும், விஸ்வப்பிரம மக்கள் நிறைந்துவாழும் சங்கத்தானை இத்தியடி கிராமத்தில் அருள்பாலித்துக் கொண்டிருப்பது நாம் அறிந்ததே.

எம் பெருமான் இன்று தேரில் பவனிவந்து நாட்டில் துயர் களைந்து தூயவர்களாக வாழவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

சிவாச்சாரிய குருமணி
**சிவபிரம்மஸ்ரீ இ. பரமேஸ்வரக்குருக்கள்**
தேவஸ்தானக் குரு.

### விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.


| | | | |
|---|---|---|---|
| நாதன் கூல்பார்<br>சங்கத்தானை, சாவகச்சேரி. | அம்மன் நகை மாடம்<br>பிரதான வீதி. சாவகச்சேரி. | வதனி நகை மாடம்<br>டச்சு வீதி, சாவகச்சேரி. | மணி ஜுவல்லறி<br>கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| ரஞ்சன் நகைத் தொழிலகம்<br>கச்சாய் வீதி, சாவகச்சேரி. | வரன் நகை மாளிகை<br>கச்சாய் விதி, சாவகச்சேரி. | ராஜன் ஆபரண மாளிகை<br>தனங்களப்பு வீதி, சாவகச்சேரி, | இந்திரன் நகை மாடம்<br>நவீன சந்தை, சாவகச்சேரி. |
| V. M. K. நகை மாளிகை<br>கண்டி வீதி, சாவகச்சேரி. | சின்னராசா சிறி<br>வரணி. | சீதா நகைத்தொழிற்சாலை<br>கண்டி வீதி, கொடிகாமம். | கீதா நகை மாடம்<br>நவீன சந்தை, சாவகச்சேரி. |

| | |
|---|---|
| செ. ச. சபாரத்தினம் நகை மாளிகை<br>பிரதான வீதி. சாவகச்சேரி. | கண்ணன் நகைத் தொழிலகம்<br>பிரதான வீதி, சாவகச்சேரி. |


## அச்சுவேலியில் கடைகள் ஞாயிறு மூடப்படும்

அச்சுவேலி, ஏப்ரல் 29

அச்சுவேலி — புத்தூர் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் அடுத்த மாதம் தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படும்.

அச்சுவேலி — புத்தூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எஸ். தங்கராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்படும்வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது விசாரணை நடத்தி தண்டம் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் ஊடாக 1995 — 96 ஆம் கல்வி ஆண்டில் வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பட்டச்சான்றிதழ்களை வழங்குவார்.

அன்றையதினம் 125 பேர் கலைமாணிப்பட்டத்துக்குரிய சான்றிதழையும்33பேர்வணிக மாணிப்பட்டத்துக்குரியசான்றிதழையும் பெற்றுக் கொள்வர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 3 ஆவது தடவையாக தற்போது பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம் பெறுகின்றது.

## இளம் யுவதி கிணற்றுக்கு பலி

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 29

அதிகாலை வேளை கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற இளம் பெண் தவறி விழுந்து கிணற்று நீரில் மூழ்கி மரணமானார்.

இச் சம்பவம் உடுவில் வடக்கு கற்பொச்கணைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள தவநாதன் சுபாஜினி (வயது 26) என்ற இளம் பெண்ணே இவ்வாறு பரிதாப மரணத்துக்குள்ளாகினார்.

கடந்த திங்கட்கிழமை காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

மேற்படி பெண்ணின் மரணம் சம்பந்தமாக சுன்னாகம் பொலிசாரின் உதவியுடன் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் விசாரணை நடத்தினார். (ஐ-152)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கலைக்கூறு தொடர் பயிற்சி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என குருணைச் சாரண பயிற்சித் தலைவி திருமதி ஆர். ஜே. பி. சேவியர் தெரிவித்துள்ளார்.

கலைக்கூறு ஒன்று, இரண்டில் பயிற்சி பெற்ற பருத்தித்துறை மாவட்டத்தைச் சேர்ந்த சாரணத் தலைவர்களும் குருளைச் சாரணத் தலைவிகளும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

கலைக்கூறு ஒன்றில் புதிதாக பயிற்சிபெற விரும்பும் புதிய ஆசிரியர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## திருமணப் பதிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

தென்மராட்சி மேற்குப் பிரிவில் உள்ள 4 பகுதிகளில் சட்ட பூர்வமாக பதிவுத் திருமணத்தை இது வரை மேற் கொள்ளாத 50 தம்பதியினருக்கான திருமணப் பதிவுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

நாவற்குழி, கைதடி, தச்சன் தோப்பு மற்றும் மறவன் புலவு பகுதிகளைச் சேர்ந்த தம்பதிகளுக்கே இவ்வாறு திருமணப் பதிவுகள் செய்யப்படவுள்ளன. (ஐ-7)

## சீநோர் முகாமில் விசாரணை துரிதம்

வலி. வடக்கு, ஏப்ரல் 29

வன்னியில் இருந்து யாழ். குடாக்கடல் ஊடாக குருநகருக்கு வருவோர் சீநோர் இடைத்தங்கல் முகாமில் கடந்த வாரம் முதல் மிக விரைவாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் விசாரணை பூர்த்தியடைந்து வீடு செல்ல சுமார் 10நாள்களுக்கு மேல் சென்றது.

இது பற்றி பொதுமக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

தற்போது துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு மூன்று நாள்களுக்குள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். (ஐ-86-ரீ)

## வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 29

வலிகாமம் வலய மட்டத்தில்பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமைகாலை ஆரம்பமாகின்றது.

போட்டிகள் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் —

மே மாதம்5ஆம்திகதிபுதன் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திலும் —

மே மாதம் 10 ஆம் திகதியும் 11ஆம் திகதியும் பிற்பகல் ஒரு மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் — நடைபெறும்.

போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் வலிகாமம் கல்வி வலயஉடற்கல்விப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ. பாலசிங்கம் செய்துள்ளார்.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வீரர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர். [ஐ-152]

## வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி

தென்மராட்சி, ஏப்ரல் 29

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் மே மாதம் 15ஆம், 19ஆம், 22ஆம் திகதிகளில் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடைபெறும்.

மே 15ஆம் திகதி எழுத்தாக்கப் போட்டிகளும் 19 ஆம் திகதி தெரிவுப் போட்டிகளும் 22 ஆம் திகதி இறுதிப் போட்டிகளும் நடைபெறும்.

இப் போட்டிகளுக்கு நடுவர்களாக பணிபுரியவுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் மே 12ஆம் திகதி புதன் கிழமை வலய மகா நாட்டு மண்டபத்தில் நடைபெறும் என வலய கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா தெரிவித்தார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்மாணத்துறைத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

## திருத்தம்

வல்வெட்டித்துறை

நகரசபைக் காரியாலயம் அமைத்தல் - கட்டம் 1

28-04-99 அன்று உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி வேலைக்கான கேள்வி அறிவித்தலில் 2 ஆம் பந்தியில் இக்ராட் தரம் எம் 7 எனக் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தகாரர் தகுதி நிலையை இக்ராட் தரம் எம் 8 என எடுத்துக்கொள்ளவும்.

பிரதம எந்திரி (நிர்மாணம்)
யாழ்ப்பாணம்

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7349)

---

பருத்தித்துறை பிரதேச செயலக
கலாசார பேரவை நிதிக்காக
இருகாட்சிகள்
செல்லையா மெற்றாஸ்மயிலின்

## வேழம்படுத்த வீராங்கனை

① 20 ஆவது ஆட்டநாட்டுக் கூத்து ① 21 ஆவது மேடை

இடம்: பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி
காலம்: 2 — 5 — 99 ஞாயிற்றுக்கிழமை

முதல்காட்சி: 10 30 மணிக்கும்
2 ஆம் காட்சி 2: 30 மணிக்கும் ஆரம்பமாகும்.

மாணவர்களுக்கு 20/- பெரியவர்களுக்கு 50/-

★ நுழைவாயிலில் ரிக்கட் பெற்றுக் கொள்ளலாம்.

செயலக கலாசார பேரவை
பருத்தித்துறை

(65280)

---

திருநெல்வேலி அரசடி

## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன்

ஆலய

## இரதோற்சவம் இன்று

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில் இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. நாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக இந்த ஆலயமும் பலத்த சேதத்துக்குள்ளாகியது மட்டுமன்றி ஆலயத்துக்கென இருந்த ஒரேயொரு புதிய சித்திரத் தேரும் முற்றாக எரிந்து சாம்பராகி விட்டதும் பெருங் கவலை. எனினும், ஆலய நிர்வாக சபையினரும், அன்பர்களும், தொண்டர்களும், அடியவர்களும், ஆதரவாளர்களும் எடுதத பெரு முயற்சியினாலும் — அயராத ஊக்கத்தினாலும் — அக்கறையினாலும், பெருமளவு திருத்த வேலைகள் செய்யப்பட்டு — வர்ணாலங்கார மண்டபமும், சிற்றாலயங்களும் — கைவண்ணக் கலை நுட்பங்களுமாய் மெருகூட்டப்பட்டுப் பொலிவுற்றுச் சிறப்புற்று மிளிர்வுற்றுப் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்ட நிலையில் இவ்வருடம் பங்குனி உத்தரத் திருநாளில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகமான குடமுழுக்காட்டப்பட்டுப் பெருஞ் சாந்தி ஹோமங்கள் வைபவமும் நிறைவுற்றுப் புதுப் பொலிவுடன் ஆலயம் காட்சியளிக்கின்றது.

அத்தோடு வருடாந்த மஹோற்சவமும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இன்று தேர்த் திருவிழாவும், நாளை சித்திரா பௌர்ணமியில் தீர்த்தோற்சவமுமாக எல்லாத் திருவிழாக்களும் அமைதியாகவும், ஆனந்தமாகவும், சிறப்பாகவும் அம்பாளின் பெருங் கருணையினால் இனிதே நடைபெறுகின்றது.

சித்திரத் தேர் இல்லாமற்போன கவலை இருந்தாலும், இம்முறை அன்பர்கள் அழகாக அமைத்துள்ள கட்டுத்தேரில் அம்பாள் வீற்றிருந்து — வீதி வலம் வந்து — வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கித் திருவருள் புரிவாள் புதிய சித்திரத் தேரொன்றும் உருவாகி அதில் அம்பாள் ஆரோகணித்துத் திருவீதியுலா வரும் திருநாளும் வெகுதூரத்திலில்லை. வரும்; வரும் விரைவில் வரும்!

அண்ட பிண்டங்களான பிரபஞ்சம் யாவற்றினையும் ஒருசேர ஓரொழுங்கில் ஒருருவப் பாங்கில் அமைத்து, அவை ஒப்பற்ற ஒரு தனி முதல்வனின் திருவருட் திருக்கருணை பெற்றிருந்தாலன்றி அசையாவென்பதை எடுத்துக் காட்டும்முகமாக, நம் கண் முன் தேராக உருவமைக்கப்பட்டுத் திரிபுர சங்கார ஞாபகத் திருவிழாவாகச் செய்யப்படுகின்றதே தேர்த் திருவிழாவாகும்.

திருவார் திருநெல்வேலியிலே திகழரசடியின்
திருத்தாயாய்
வருவோர் போவோர் வாசலிலே வணங்கித்
துதித்து மலர் தூவப்
பெருகிட வளங்கள் பேறுகளாய்ப் பேரருள் புரியும்
பெருமாட்டி
செருத்தவிர் சிவகாம சுந்தரியாள் திருத்தாள்
பணிந்தே சிறப்போமே,

- ச. தங்கமாமயிலோன்

(65275)

---

## வில்லூன்றியில் தீர்த்தமாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நாளை வெள்ளிக்கிழமை சித்திரா பூரணைப் பெருவிழா நடைபெற உள்ளது.

காலை 6.45 மணிக்கு வசந்தமண்டப பூசை, 8.00 மணிக்கு தீர்த்தவாரி, காலை 9.00 மணிமுதல் 10.00 மணி வரை சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல் ஆகியன இடம் பெறும்.

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-17-173-30)

## வலைப்பந்தாட்ட அரை இறுதி போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ 15 வயது - சண்டிலிப்பாய் இந்து எதிர் வேம்படி மகளிர், வட இந்து மகளிர் எதிர் உடுவில் மகளிர்.

★ 17 வயது - யூனியன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்து, வேம்படி மகளிர் கல்லூரி எதிர் கம்பர் மலை அ. த. கலவன்.

★ 19 வயது — மெதடிஸ்த மகளிர் எதிர் வட இந்து மகளிர், சுண்டிக்குளி மகளிர் எதிர் சண்டிலிப்பாய் இந்து.

(இ-6)

## கும்பாபிஷேகம்

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 29

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய இராஜகோபுர புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பூர்வாங்க கிரியைகள் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

(க-133)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

முன்னர் அறிவித்திருந்தவாறு 1995/96 கல்வி ஆண்டுக்கான வெளிவாரிப் பட்டப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் 1999-05-02 அன்று வழங்கப்படமாட்டாது. சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி.
1999 - 04 - 28

(சி/7350)

---

## நாளை செயலமர்வு

வடமராட்சிக் கல்வி வலயத்தில் தரம் 6, 9 களில் உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

(க-118)

---

## வாசகர் திருமுகம்

## சித்திர குப்த விரதம்?

சித்திர குப்த விரதம் எப்போது? என்று வாசகர் ஒருவரின் சந்தேகம் 22 - 04 - 99 ஆம் திகதிய உதயனில் வெளிவந்திருந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்தத் திருமுகம் அமைகிறது.

மன்னுசித்திரையாமாதம் வளர்மதியிடையுவாவிற்
பன்னிய நடுநாடன்னிற் பரிதியின் சேயனான
மின்னு சித்திர குப்தற்கு விருப்புறு விரதமாகு
மன்ன மென்னடையாய் தான மந்தணர்க்கு வந்து
நல்குக!

இப் பாடல் சரசோதிமாலை என்னும் நூலில் உள்ளது. இதன்படி சித்திரகுப்த விரதம் பூரணையன்றே கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் படியே பஞ்சாங்கத்தில் நூற்றாண்டுகளாக குறிப்பிட்டு வருகின்றோம். மற்றும் விரத பூஜாவிதானம் ஆகிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. ஆகவே சித்திரை மாதம் 17 ஆம் திகதி [30 - 04 - 1999] அன்றே வேதாகம விதிப்படி சித்திர குப்த விரதம் அனுஷ்டிக்க வேண்டும்,

இ. வெங்கடேசஐயா.

சோதிட பரிபாலன மடம்,
கொக்குவில்.

---

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி 28-04-1999 இல் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கிருஷ்ணானந்தமூர்த்தி [நல்லூர் வர்த்தக சங்கச் செயலாளரும் தர்சினி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்) போகராசா, இரத்தினராசா [ஜேர்மனி], இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பு, செல்லத்துரை, தங்கராசா, இராசதுரை, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் சூரிய குமாரி, சிவஞானதேவி, தேவி (ஜேர்மனி), நல்லையா [டோகா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [29-4-99] வியாழக்கிழமை காலை 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈச்சங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
க. கிருஷ்ணானந்தமூர்த்தி.
க யோகராசா.
ந இராஜேஸ்வரி
(பிள்ளைகள்)

தர்சினி ஸ்ரோர்ஸ்,
ஆடியபாத வீதி,
கல்வியங்காடு

(65289)

### திருமதி குணரெத்தினசிங்கம் செல்லம்மா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 259, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரெத்தினசிங்கம் செல்லம்மா அவர்கள் 28-4-99 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரெத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர், J P ) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தில்லைவனத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் கனகசபை (சங்கரபிள்ளை), இராமாசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் சிவானந்தசிங்கம் (கனடா), விஜயலெட்சுமி (மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயநிதி (கனடா), வீ. வீ. முருகையா (இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன், வனமாலி விற்பனை நிலையம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவன் (கனடா), அகனியா (கனடா), அபிராமி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்புச் சகோதரியும் காராளசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்றவர்களான நவரெத்தினசிங்கம், சபாரெத்தினசிங்கம், இராசம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-4-99) வியாழக்கிழமை காலை 11 00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி முருகையா விஜயலெட்சுமி
(மகள்)

259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(65286)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவன்

## ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய

## ராஜகோபுர புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம்

30—04—99 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கும்பாபிஷேகம் நிகழும். தொடர்ந்து 10.30 மணிக்கு ராஜ கோபுர கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா இடம்பெறும். மாலை 4.00 மணிக்கு விசேட மங்கள வாத்திய சகிதம் சுவாமி சப்பரத்தில் வீதியுலா வந்து அருள் பாலிப்பார்.

பிரதமகுரு:
சிவஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள்

(65287) — உபயகாரர்



இன்று கைதடியில் சித்திரத் தேரேறி
நமது அடியார்களுக்கெல்லாம் தரிசனம்
அளிக்க வலம் வரும்

## வீரகத்தி விக்ன விநாயகப் பெருமானே!

இக் குவலயம் செழிப்புற்று ஓங்க உங்கள்
அருள் மழையைப் பொழிய வேண்டி
நிற்கின்றோம் விக்ன விநாயகா!



## ஓம் முருகன் நகை மாடம்

கைதடிச் சந்தி, கைதடி.

கிளை:

## ஓம் மஹாலக்ஷ்மி நகை மாடம்

இருபாலைச் சந்தி, இருபாலை.

[65263]



## கருத்தரங்கு

பொருள்:-'தொடர்புச் சாதனங்களிடைகுடும்பம்'

கருத்துரை வழங்குபவர்:- கலாநிதி என்.சண்முகலிங்கன்

தலைவர், அரசறிவியல் சமூகவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

காலம்:- 30—04—1999 நேரம்:- 3. 30 மணி

இடம்:- "அகவொளி"
குடும்பவளத்துணை நிலையம்,
131. பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

இதில் கலந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

(65248) — இயக்குநர்


### புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்)

பொருள்களைக் கொழும்பிலுள்ள அரச இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவு மற்றும் மண்ணியல் நிபுணருக்கு அனுப்பி வவப்பது தொடர்பான மனுவொன்றை யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வி. ஸ்ரீ இராஜேஸ்வரன் இன்று யாழ். நீதிமன்றத்தில்தாக்கல்செய்யவுள்ளார்.

கடந்த 7 ஆம் 8 ஆம் 9 ஆம் 10 ஆம் 16 ஆம் திகதிகளில் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின் போது 20 ஆம் திகதி அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் அரிக்கப்பட்ட போதும் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள், பெண்கள் அணியும் உடைந்த காப்புகள், சிறு குழந்தைகளின் காப்புகள், உட்பட இந்த புதைகுழி பிரதேசத்திலிருந்துஎடுக்கப்பட்ட மண்ணின் மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட 22 மண்டை ஓடுகளும் மற்றும் அவற்றுக்குரிய எலும்புத் தொகுதி ளும்ஆறு பொதிகளில் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்லி வீதியிலுள்ள சட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

### மே தினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

யவை நீண்ட காலத்துக்கும் மூடப்பட்டிருக்கும் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை குறிப்பிட்ட வீதிகளில் வாகனப் போக்குவரத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் மே தின ஊர்வலங்கள செல்லும் பாதைகளில் வாகனங்களை நிறுத்தி வைக்க வேண்டாமென்றும் பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் தமது அடையாள அட்டைகளையும் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரங்களையும் ஏனைய ஆவணங்களையும் தவறாது தம்முடன் எடுத்துச் செல்லுமாறும் பொலீஸார் கேட்டுள்ளனர்.

மே தினக் கூட்டங்களைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே. வி. பியும் கொழும்பிலும், ஐ. தே. கட்சி காலியிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியாவிலும் ஏனைய கட்சிகள் கொழும்பிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

(இ-6)


## உதயம்

## பொருள்கள் வாடகைக்குச் கொடுக்குமிடம்

பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ், கறிவாளிகள், கரண்டிகள், சோற்று பேசன், மாபிள் பீங்கான், கிளாஸ், குத்துவிளக்கு, பிளாஸ்ரிக் பாய்கள், பந்திப் பாய்கள், தறப்பாள்கள், பைவர், சில்வர் றே, கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், குசன் கதிரைகள், இரும்புக் கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், பந்தல்கள், பான் (மின் விசிறி), மணவறை, திருமணக் கார் முதலியவற்றுடன் இன்னும் பல
அத்துடன்

வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத்தொடர்புகளை
குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளலாம்.

எந்த நாட்டுக்கும் பக்ஸ் மூலம் செய்திகளை உடனுக்குடன் அனுப்பிவைக்கலாம்.

அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

## உதயம்

172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கி அருகில்]

T. P. No, 2392 (65256)


### சில தகவல்...

(முதலாம் பக்கத் தொடர்)

உயர்மட்டக் குழுவொன்று நேற்று வவுனியாவுக்குச் சென்று இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து சிவநாதன் கிஷோரின் கைது குறித்து உரையாடினார்கள்.

ஓரிரு நாள்களில் விசாரணைகள் முடிவடைந்ததும் அவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்றும்—

இன்று அல்லது நாளை அவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும்— இராணுவ அதிகாரிகள் குழுவினரிடம் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் நேற்று முன்தினம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையின் தற்காலிக சாரதியான இராஜதுரை கணேஷ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

### மின் மாற்றி...

( முதலாம் பக்கத்தொடர்)

150 கே. வி. வலுக் கொண்ட இந்த மின்மாற்றி தகர்க்கப்பட்டதை அடுத்து அந்தப்பகுதிக்கான மின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்மாற்றியின் பெறுமதி சுமார் 4 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ-6-14-21)

## கனகராயன்குளம் பகுதியில் மோதல்?

வவுனியா, ஏப்ரல் 29

கனகராயன்குளம் பகுதியில் நேற்று மோதல்கள் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

[இ-6-164]

### உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் உயிலங்குளம் ஊடாக பாதை மீண்டும் திறக்கப்பட்டது. முதலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் மூலம் 10 அவசர நோயாளர்கள் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டனர்

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் வவுனியாவுக்கு வருவதற்கு காத்திருந்த போதும் முன்னறிப்பின்றி பாதை திறக்கப்பட்டதை அடுத்து 300 பேர் மட்டுமே வவுனியாவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை —

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான உணவுப் பொருள்களைஎடுத்துச்செல்ல வாகனத் தொடரணிக்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை என்று வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-6-164)


உ

தாவடி

## ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

29 - 04 - 99 இரதோற்சவம் காலை 10.00 மணி
30 - 04 - 99 தீர்த்தோற்சவம் காலை 11.00 மணி

(1008 சங்காபிஷேகமும், விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்)

ஆலய முகாமையாளர்

(65276)



நெல்லியடியில்...

## புதுக்கடை திறப்பு விழா

## ஸ்ரீஜெயா ரேட் சென்ரர்

30.04-1999 வெள்ளிக்கிழமை
பகல் 1-10 முதல் 3.07 வரை

★ றெடிமேற் ஆடைகள்
★ பாட்டா, டி.எஸ்.ஐ. உள்ளூர், வெளிநாட்டு பாதணிகள்
★ மாணவர்களுக்கான பாக், கொப்பி வகைகள்
★ விளையாட்டு உபகரணங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகளுக்கான சீருடைகள்
விசேடமாகச் செய்து கொடுக்கப்படும்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

மு. ரகுநாதன் (உரிமையாளர்)
ஜெயா காமன்ஸ்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

திருமகள் கட்டட முன்வீதி,
நெல்லியடி.

(65228)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான
அ. இராசதுரை
அவர்களின் அன்புத் தந்தையாகிய

## அப்புத்துரை

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம்.

(65283)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org